Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா; 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 சித்திரை 28 (11 - 05 - 1991) சனிக்கிழமை ஓசை: 82

## ஓய்வூதிய வவுச்சர்களில் இனி தாமதம் இருக்காது

(யாழ்ப்பாணம்)

ஓய்வூதிய வவுச்சர் சம்பந்தப்பட்ட விடயத்தில் இனி பேச நிலுவைநிலை இருக்கமாட்டாது செயலகத்துக்கு வரும் வவுச்சர்கள் உடனடியாக ஓய்வூதியர்கள் பெறக் கூடியவகையில் அனுப்பிவைக்கப்படும் என யாழ் செயலக ஓய்வூதியக் கணக்காளர் கூறி உள்ளார். அவர் மேலும் ஏற்கனவே மாத வவுச்சர்களை இன்று தாம் அனைத்து ஓய்வூதியர்களுக்கும் அனுப்பவைத்து (4ஆம் பக்கம் பார்க்க)

# மாதர், பணிக்கர் குளத்தில் 3 மணிநேர கடும் மோதல்

## பவல் சேதம், பல இராணுவம் பலி

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் நேற்றுமுன் தினம் கோழியாகுளத்தில் இருந்து பாலமோட்டைக்கு விமானப்படையின் உதவியுடன் முன்னேற முயன்ற இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில இரு இடங்களில் கடும் மோதல் மூண்டது இம்மோதலைத் தொடர்ந்து இராணுவத்தினர் மாதர் பணிக்கர் குளத்தில் தரித்துள்ளனர்

இம்மோதல்களில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டும், பலர் படுகாயமடைந்தும் உள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும் இராணுவத்தினரின் பவல் வாகனம் ஒன்றும் சேதமடைந்தது. இம்மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் ஒரு போராளி வீரமரணமடைந்தார்

நேற்று முன் தினம் காலை 9-3 மணியளவில் வவுனியா மாவட்டத்தில் உள்ள கோழியா குளம் பகுதியில் நிலைகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் பவல் கவசவாகனம், புல்டோசர், ரக் உட்பட சனரக வாகனங்கள் சகிதம் பூவரசங் குளம் பகுதியை நோக்கி முன்னேறி வந்தனர்.

இராணுவத்தினருக்கு உதவியாக இரண்டு குண்டு வீச்சு விமானங்கள், இரண்டு அவ்ரோ விமானங்கள், இரண்டு ஹெலிகொப்ரர்கள் ஒரு வை-12 ரக விமானம் ஆகியன காலையில் இருந்து மாலை வரை குண்டு வீச்சை மேற்கொண்டன. இக் குண்டு வீச்சின்போது நூற்றிற்கு மேற்பட்ட குண்டுகள் வீசப்பட்டன இதே வேளை பூவரசங்குளம் பகுதியை நோக்கி முன்னேறி வந்த சிறிலங்கா இராணுவத்தினர்மீது பூவரசங்குளத்துக்கும்கோழிய குளத்துக்கும் இடையில் வைத்து விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டதாகத் தெரிய வருகிறது. அரை மணி நேரமாக நீடித்த இத் தாக்குதலால் சிறிலங்கா (4 ஆம் பக்கம் பார்க்க)

## புளியங்கூடல், சரவணை மீது கடும் ஷெல் தாக்குதல்

(சரவணை)

ஊர்காவற்றுறைப் பகுதியில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் புளியங்கூடல். சரவணை கிழக்குப்பகுதி போன்ற பொது மக்களின் குடியிருப்புக்களை நோக்கி ஷெல் தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

நேற்றுக்காலை இடம்பெற்ற இத்தாக்குதலின் போது பல ஷெல்கள் மேற்படி பகுதிகளில் வீழ்ந்து வெடித்ததைத் தொடர்ந்து இப்பகுதிகளுக்கு தமது வீடுகளைப் பார்வையிடுவதற்குச் சென்ற மக்கள் திரும்பிவந்துவிட்டனர் இத் தாக்குதலால் ஏற்பட்ட சேத விபரங்கள் தெரியவில்லை. (க)

## எகலிய கொடையில் 46 கிலோ இரத்தினக் கல்

(கொழும்பு)

எகலியகொடையில் உள்ள செடுவத்தை என்ற இடத்தில் இலங்கையில் மிகப்பெரிய இரத்தினக்கல் ஒன்று அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது. இதன் எடை நாற்பத்தாறு கிலோ இந்த இரத்தினக்கல் கொறண்டன் வர்க்கத்தைச் சேர்ந்தது என்று இரத்தினக்கல் நிபுணர்கள் குழு கருதுகிறது இதன் பெறுமதி இன்னமும் மதிப்பிடப்படவில்லை.

## சிறிலங்காவில் இன்று உள்ளூராட்சித் தேர்தல்

(கொழும்பு)

சிறிலங்காவில் இன்று 236 உள்ளூராட்சி சபைகளுக்கு 3533 பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் தேர்தல் இடம் பெறுகிறது 15,000 க்கும் கூடுதலான வேட்பாளர்கள் இத் தேர்தலில் போட்டியிடுகின்றனர். இந்த வேட்பாளர்கள் 11 அரசியல் கட்சிகளையும், 88 சுயேச்சைக் குழுக்களையும் பிரதிநிதித்துவம் செய்கின்றனர். சுமார் 85 லட்சம் வாக்காளர்கள். 7500 வாக்குச் சாவடிகளில் தமது வாக்குகளைப் பதிவு செய்யவுள்ளனர். வாக்குப்பதிவு காலை 7 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை நடைபெ (4 ஆம் பக்கம் பார்க்க)

## இனி ஒரு தாக்குதல சம்பவம் நிகழுமாயின் உறவில விரிசல் ஏற்படும்; பிரான்ஸ் அரசு எச்சரிக்கை

(பாரிஸ்)

வவுனியா மாவட்டத்தில் கடந்த மூன்றாம் திகதியன்று எம். எஸ். எப் மருத்துவ குழு உறுப்பினர்கள் மீது விமானத் தாக்குதல் நடந்தது பற்றி பிரான்சு அரசு தனது கடுமையான கண்டனத்தை வெளியிட்டுள்ளது. இத் தாக்குதலில் மருத்துவர் ஒருவரும் இரு தாதியரும். வாகனச் சாரதியும் காயமடைந்தது தெரிந்ததே.

இச் சம்பவம் பற்றி ஆராய தனிநபர் விசாரணைக் குழு நியமிக்கப்பட்டிருப்பதாக சிறிலங்கா அரசு கூறியுள்ள போதிலும் இதுபோல் இன்னுமொருமுறை இச்சம்பவம் நடைபெறுமேயானால் பிரான்சிற்கும் சிறிலங்காவிற்குமான உறவில்கூட சிக்கல் ஏற்படுமென பிரான்சு கடுமையாக எச்சரிக்கை விடுத்துள்ளது.

## யாழ்.பல்கலைமாணவருக்கு கொழும்பில் பரீட்சை

(கொழும்பு)

யாழ்ப்பாணம் சென்று பரீட்சைக்குத் தோற்ற முடியாத மாணவர்களின் நலன் கருதி யாழ. பல்கலைக்கழகத்தின் வேண்டுகோளின் பேரில் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மூன்றாம் ஆண்டு எம். பி. பி. எஸ். பரீட்சைகளைக் கொழும்பில் நடாத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கொழும்பில் இந்தப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்கள் இந்த மாதம் 13 ஆம் திகதி காலை 8.30 மணிக்குப் பல்கலைக்கழகங்கள் மானியக் குழுவுடன் தொடர்பு கொள்ளுமாறு இக் குழு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வீரவணக்கம்

### மனோஜ், லெப். ஜனகன்

(யாழ்ப்பாணம்)

வவுனியா மாவட்டத்தில் நேற்றுமுன தினம் பூவரசங் குளத்துக்கும், கோழியா குளத்துக்கும் இடையில் சிறிலங்கா இராணுவத்துடனான மோதலில் வீரவேங்கை மனோஜ் (யாழ்ப்பாணம்) என்பவர் வீர மரணமடைந்துள்ளார்.

இதே தினம் திருக்கோணமலை மாவட்டத்தில் இடம் பெற்ற வெடி விபத்தில் லெப். ஜனகன (தம்பலகாமம், திருமலை) என்பவர் வீர மரணமடைந்துள்ளார்.

இவர்களுக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கம் உறுப்புரிமை மட்டும் வைத்திருக்க விரும்புகிறது

(யாழ்ப்பாணம்)

எமது சங்கம் உங்கள் சங்கத்தில் உறுப்புரிமையை மட்டும் வைத்துக்கொள்ள விரும்புகிறது என்று யாழ் ஆங்கில மருந்து வர்த்தகர்சங்கம்யாழ். வர்த்தக சங்கத்துக்குத் தெரிவித்துள்ளது.

யாழ் ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கம் யாழ் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஆங்கில மருந்து வியாபாரிகளையும் உள்ளடக்கியது. அத்துடன் எங்கள் சங்கத்தின் செயற்பாடுகள் யாவும் உங்கள் சங்கச் செயற்பாடுகளிலிருந்து வேறுபட்டது.பொதுவிடயங்களில் ஒத்துழைப்பு வழங்க எங்கள் சங்கம் தயாராக உள்ளது என்பதை அறியத் தருகிறேன்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஜெயலலிதாவின் உரைக்கு கருணாநிதி கண்டனம்

(சென்னை)

கடந்த திங்கட்கிழமை சென்னை வானொலி நிலையத்திலிருந்து அ. இ அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் செல்வி ஜெயலலிதா ஆற்றிய உரை தேர்தல் ஒலிபரப்பு விதிகளுக்கு மாறானது என்று தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி கண்டனம் தெரிவித்துள்ளார் கருணாநிதியின் கூற்றை சென்னை வானொலி நிலையத்தின் தலைவர் மறுத்திருக்கிறார். நேற்று சென்னையில் அறிக்கை வெளியிட்ட அவர் தேர்தல் விதிமுறைகளுக்கு அமைவாகத்தான் ஜெயலலிதாவின் உரை இருந்தது என்று தெரிவித்துள்ளார்

## மிதிவெடியில் சிக்கிய சிறுவன் காயம்

(யாழ்ப்பாணம்)

நண்பர்களுடன் வயலில் விளையாடிக்கொண்டிருந்த சிறுவன் அங்கு புதைத்து வைக்கப்பட்டிருந்த மிதிவெடியில் (4ஆம் பக்கம் பார்க்க)

விளம்பரம்

விற்பனைக்கு

அதி தீவிர சக்தி கொண்ட மில்க்வைற் திரவ சவர்க்காரம் வீட்டுச் சலவைக்குப் போலவே வீட்டுத்தரை, மரத்தளபாடங்கள், வீட்டுப் பாத்திரங்கள், கண்ணாடிப் பொருள்கள் அழுக்கை அகற்றவும் உதவுகிறது. மில்க்வைற், யாழ்ப்பாணம்.

(B/2482)

## சீனா விஜயம்

சோவியத் பாதுகாப்பு அமைச்சர் சீன விஜயத்தை முடித்துக் கொண்டு தாயகம் திரும்பியுள்ளார்.

சோவியத் பாதுகாப்பு அமைச்சரின் சீன விஜயத்தின் போது புதிய ஒப்பந்தங்கள் எதுவும் ஏற்படாத போதும் 1949ஆம் ஆண்டின் பின்னர் சோவியத் இராணுவ அமைச்சர் ஒருவரின் முதலாவது விஜயம் இது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# சிறு கைத்தொழில்கள் இயங்க முடியாத நிலையில்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சிறுகைத் தொழில் திணைக்களத்தின் கீழ் உள்ள தும்புத்தொழிலும் மரவேலை நெசவு கைத்தறி ஆகியனவும் இயங்காத நிலையில் உள்ளன.

இத்திணைக்களத்தின் கீழ் மீசாலை, சாவகச்சேரி, கரவெட்டி, மல்லாகம், சங்கானை, அராலி, கொழும்புத்துறை ஆகிய ஏழு இடங்களில் தும்புத்தொழிலும் யாழ் நீர்த்தாங்கியடி, மானிப்பாய் ஆகிய இடங்களில் மரவேலை தொழிற்சாலைகளும் புங்குடுதீவில் கைத்தறியும், உள்ளதாக இத்திணைக்களத்தின் பணிப்பாளர் கூறியுள்ளார்.

(லோ)

## தீவக பிரதேச சபைகள் கொக்குவிலில் இயங்கும்

(யாழ்ப்பாணம்)

செயலற்றிருக்கும் வேலணை ஊர்காவற்றுறை பிரதேச சபை அலுவலர்கள் கொக்குவில் பிரதேச உப அலுவலகத்தில் இயங்குவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது

இது தவிர தீவகத்திலிருந்து இடம் பெயர்ந்த பிரதேச சபை உத்தியோகஸ்தர்களுக்கு குடாநாட்டில் உள்ள பிரதேச சபை அலுவலக பதவி வெற்றிடங்களுக்கு தற்காலிக பதில் நியமனமும் வழங்கப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(லோ)

## சோவியத் - சீனா கெடுபிடி யுத்தம் முடிவு

(பீக்கிங்)

சீனாவும் சோவியத் யூனியனும் ஒன்றுக்கொன்று அச்சுறுத்தலாக இருக்கமாட்டாது என சீனாவிலுள்ள சோவியத் தூதரகம் அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் இந்த தூதரகம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் பல தசாப்தங்களாக இரு நாடுகளுக்குமிடையே நிலவிய 'கெடுபிடி' யுத்தம் முடிவடைந்தது என்ற வகையில் இதனைத் தெரிவித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

## அகதி முகாம்களுக்கு சுகாதார உத்தியோகத்தர்

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டிருக்கும் அகதிமுகாம்களுக்கு போதிய சுகாதார வசதிகள் என்பன செய்து கொடுக்கப்பட்டுள்ளதாகவும் அகதிகளின் குறைகளை கவனிப்பதற்கும் அகதிகளுக்கு நோய்வராமல் தடுப்பதற்கும் சுகாதார மேற்பார்வையாளர்கள், சுகாதார மருத்துவர்கள் நியமிக்கப்பட்டிருப்பதாக யாழ் மாநகர சுகாதார பரிசோதகர் க. சபாபதிப்பிள்ளை தெரிவித்துள்ளார்

கொழும்புத்துறையில் உள்ள 3 பாடசாலையிலும் சுமார் 1659 அகதிகளும் அரியாலையில் உள்ள 2 பாடசாலையில் 1063 அகதிகளும் தங்கியுள்ளனர் இவர்களின் அத்தியாவசிய தேவையை கவனிப்பதற்கு செ. தெய்வேந்திரம், நா. கனகராசா, ஜோ. சந்தியாக்கோன் ஆகிய மூன்று சுகாதார மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். (43)

## 800 குடும்பங்கள் கிளிநொச்சியில் தஞ்சம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் தஞ்சமடைந்துள்ள பிற மாவட்டத்தைச் சேர்ந்த மக்களுக்கு ஒரு வாரகால உலர் உணவு வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுளது.

தீவுப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தங்கி இருக்கும் சுமார் அறுநூறு குடும்பங்களுக்கும் ஓமந்தை, புளியங்குளம், கனகராயன்குளம் தீவு பகுதி ஆகிய இடங்களிலிருந்து இடம் பெயர்ந்து கிளிநொச்சியில் தங்கியிருக்கும் 200 குடும்பங்களுக்கும் உதவி அரசாங்க அதிபர்கள் மூலம் உலர் உணவு வழங்கும் கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு க. மாணிக்கவாசகரின் பணிப்பின் பேரில் வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகிறது. (49)

## வறியநாடுகளின் விருத்திக்கு ஜப்பானில் மாநாடு

(டோக்கியோ)

பொருளாதார மந்த நிலை எதிர்நோக்கும் நாற்பத்தி மூன்று ஆசிய, ஆபிரிக்க நாடுகளின் பொருளாதாரத்தை விருத்தி செய்வதற்கான வழிவகைகளை ஆராயும் பொருட்டு ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் மாநாடு ஒன்று கூட்டப்படவுள்ளது.

இம் மாதம் 13 ஆம் திகதியில் இருந்து 15 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இம் மாநாட்டை ஐக்கிய நாடுகள் முதலீட்டு அபிவிருத்தி நிதியமும் சேர்ந்து நடத்தவுள்ளது.

அதே வேளை உலகில் இன்று வறிய நாடுகளுக்கு உதவி வழங்கும் நாடுகளில் ஏனைய நாடுகளை விட ஜப்பான் முன்னணியில் உள்ளது.

இது வரை மூன்றாம் உலகிற்கு ஜப்பான் வழங்கிய கடனின் தொகை 896 கோடி டலார்கள் ஆகும்.

## விவசாயிகளுக்கு நியாய விலையில் மண்ணெண்ணெய்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாயிகளுக்கு நியாய விலையில் மண்ணெண்ணெய் வழங்கப்படும்.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மூலம் தோட்டச் செய்கையில் ஈடுபட்டிருப்போரின் பெயர், தோட்டம் செய்யப்பட்டுள்ள நிலத்தின் பரப்பளவு ஆகியவற்றைத் திரட்டி வருகிறார்.

(49)

## நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை

(யாழ்ப்பாணம்)

குடும்பத் தகராறு காரணமாக இளம் குடும்பஸ்தர் ஒருவர் நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

துர்க்கை அம்மன் ஆலய அகதிமுகாமில் தங்கியிருக்கும் கடலை வியாபாரியான தையிட்டியைச் சேர்ந்த ராமகிருஷ்ணன் (வயது 30) என்பவரே கிருமிநாசினியை அருந்திய நிலையில் தெல்லிப்பளை அரசினர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின் யாழ்போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று முன் தினம் அங்கு மரணமானார். (ச)

## உணவுப் பொருள் உதவி

(கிளிநொச்சி)

முருகண்டியில் தங்கியிருக்கும் 25 இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு கிளிநொச்சி மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் உணவுப் பொருள்களை வழங்கியது.

ஓமந்தை, புளியங்குளம், கனகராயன்குளம் ஆகிய இடங்களில் வசித்து வந்த 25 குடும்பங்கள் இராணுவ நடவடிக்கைகளினால் இடம் பெயர்ந்து முருகண்டியில் தங்கியுள்ளன.

(49)

யாழ்.

ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கம்

456, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

யாழ் அரசாங்க அதிபரின் பணிப்புரையின் பேரில் பின்வரும் மருந்து வகைகளின் ஆகக் கூடிய சில்லறை விலை பின் வருமாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

| Name | | | Price Rs. Cts. |
|---|---|---|---|
| Metranidazole Tabs (Flagyl) | | ... | - 40 |
| Cotrim Tabs | | ... | 1 - 15 |
| Propronol Tabs | 40 Mg | ... | - 47 |
| Propronol Tabs | 10 Mg | ... | - 37 |
| Tolbutomide Tabs | | ... | - 85 |
| Rastinon Tabs | | ... | 1 - 15 |
| Prednisolone Tabs | | ... | - 35 |
| Indocid Caps | | ... | - 37 |
| Stugeron Tabs | | ... | 4 - 00 |
| Stugeron Forte Caps | | ... | 7 - 20 |
| Vascardin Tabs | | ... | - 95 |
| Chloramphenicol Caps | | ... | 1 - 35 |
| Cloxacillin Caps | | ... | 2 - 50 |
| Ventolin Tabs (Glaxo) | | ... | 1 - 05 |
| Piriton Tabs | | ... | - 11 |
| Ampicillin Caps | | ... | 1 - 70 |
| Becosules Caps | | ... | 1 - 80 |
| Obron Caps | | ... | 1 - 30 |
| Phenergan Tabs | 25 Mg | ... | - 20 |
| Phenergan Tabs | 10 Mg | ... | - 10 |
| Digene Tabs | | ... | - 40 |

பாவனையாளரின் நன்மை கருதி மேற்படி விலைப் பட்டியல் வெளியிடப்படுகின்றது.

சிவஞானம் ஸ்ரீ கணேசன்
கௌரவ செயலாளர்.

(B-2493)

## இதய அஞ்சலி

### அமரர் பரமநாதர் ஏகாம்பரம்

ஹாட்லிக்கல்லூரியின் பழைய மாணவரும் 23 வருடங்கள் ஆசிரியராகவும் 3 வருடங்கள் அதிபராகவும் இருந்து கல்லூரியின் புகழுக்கு மெருகூட்டிய திரு. ப. ஏகாம்பரம் அவர்கள் நியூசிலாந்தில் காலமானதையிட்டு ஆழ்ந்த கவலை அடைகிறோம்.

அன்னாரின் குடும்பத்தவரின் கவலையில் பங்குகொண்டு அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

ஹாட்லிக்கல்லூரி, பருத்தித்துறை,

அதிபர், ஆசிரியர், மாணவர்

(B-2492)

## நினைவு கூருகின்றோம்...

**1991 - 05 - 11**

1985 ஆம் ஆண்டு இதேதினத்தில் கல்லடி சிறிலங்கா அதிரடிப் படைமுகாமில் சித்திரவதை செய்து கொல்லப்பட்ட

நாதன் (சிவநாதன் - திருப்பழுகாமம்)

1986 ஆம் ஆண்டு வீரமரணமடைந்த

★ சின்னத்துரை சிவநடராசா (முறக்கொட்டாஞ்சேனை)

1987ஆம் ஆண்டு தாண்டியடியில் சிறிலங்காப் படைகளின் சுற்றி வளைப்பின் போது வீரமரணமடைந்த

பவன் (கிருஷ்ணபிள்ளை சுவேந்திரன் - தம்பிலுவில் 02)

இதே ஆண்டு யாழ்ப்பாணத்தில் விமானக்குண்டு வீச்சினால் வீரமரணமடைந்த

சிவா (சிவலிங்கம் சிவானந்தன் - ஹட்டன்)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

★ மேற்குறிப்பிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B/ 2491)

## சிந்தனைக்கு

மனிதனிடம் சில குறைபாடுகள் இருக்கலாம். ஆனால், தவறு செய்வது அவற்றில் ஒன்றல்ல.
— ஜேம்ஸ் ஹோஃபர்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 11-05-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம் :2208
த.பெ.எண்: 05

# இந்தியாவும் தேர்தல் ஜனநாயகமும்

இம்மாத இறுதியில் இந்தியாவில் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது தேர்தல் பிரசாரங்களும் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளன கட்சித் தலைவர்கள் நாடு பூராவும் சூறாவளிச் சுற்றுப் பயணங்கள் மேற் கொண்டுள்ளார்கள். இவை ஒருபுறம் நிகழ்ந்து கொண்டிருக்கையில் இந்திய அரசியல்வாதிகளும், கட்சித் தொண்டர்களும் தமக்குள்ள 'ஜனநாயக உரிமை'களைப் பயன்படுத்தி தேர்தல் வேடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

அரசியல்வாதிகளும், தொண்டர்களும் தற்பொழுது எந்தக் கட்சியில் உள்ளனர் என்பது தெரியாது கட்சிகள் தடுமாறுகின்றன. யாரை வேட்பாளராக நிறுததினால் குறைந்த எண்ணிக்கையானோர் கட்சியில் இருந்து விலகுவார்கள் என்பதைக் கணிப்பிடுவதும் சிரமமாகவுள்ளது. அரசியல்வாதிகள் என்ன 'மூட்'டில் இருக்கின்றார்கள், அவர்களுடன் எது பேச வேண்டும், எதைப் பேசக் கூடாது, அவர் சாதி அடிப்படையில் சிந்திக்கின்றாரா, சமய அடிப்படையில் சிந்திக்கின்றாரா, அல்லது கட்சியின் உறவுகள் பற்றிச் சிந்திக்கின்றாரா என்பதையும் கட்சி தலைமை சிந்திக்க வேண்டியுள்ளது.

சந்திரசேகர் இந்திரா காங்கிரஸ் கட்சியின் ஆட்சியுடன் மந்திரி சபை அமைத்தபோது ராஜீவ் காந்தியின் மைததுனியான மேனகா காந்தியும், இந்திய தேசிய விளையாட்டு வீரரான செய்யது மோடியின் கொலை வழக்கில் தொடர்புடையவர் எனச் சந்தேகிக்கப்படும் சஞ்சய்சிங்கும், முன்னாள் வெளியுறவு அமைச்சர் சுக்ளாவும் மந்திரி சபையில் இடம்பெறக் கூடாது என்பதில் குறியாக இருந்தனர். ஆனால், இன்று வி. சி சுக்ளா இந்திரா காங்கிரஸில் சேர்ந்துள்ளார், அவரை இ. காங்கிரஸும் சேர்த்துக்கொண்டு விட்டது.

இதேபோன்று பிராந்திய மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் கட்சி மாறுதலும், புதிய கட்சி ஆரம்பித்தலுக்குமான சூழ்நிலை மிக உயர்வாக நிலவும் காலம். குஜராத் மாநிலத்தின் இன்றைய முதன்மந்திரி சிமன்பாய்பட்டேல் மாநிலத்தில் தனது ஆட்சியைக் காப்பாற்றுவதற்காக சந்திரசேகரரின் ஜனதாதள எஸ்ஸிலிருந்து பிரிந்து ஜனதாதளம் எஸ் குஜராத்பிரிவு என்ற புதுக்கட்சியை ஆரம்பித்துள்ளார்.

இதே நிலை தமிழ் நாட்டிலும் போதியளவில் உள்ளது. 102 வயதுடைய மூதாட்டி வேட்பாளர் மனு தாக்கல் செய்து தேர்தலில் ஒரு பரபரப்பை ஏற்படுத்தினார். தொலைக்காட்சியிலும் அதற்கு முதன்மை கொடுக்கப்பட்டது.

எம். ஜி. ஆரின் கீழ் ஒரே அணியாக இருந்த அ.இ.அ தி மு.க. பல்வேறு அணிகளாகப் பிரிந்து ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு எனக் கட்சியின் பின் இலக்கங்கள் இட்டுள்ளன. தி மு. க. அணியில் இருந்த முக்கிய பிரமுகர்கள் சிலரும் கட்சியை விட்டு வெளியேறி வேறு கட்சியில் சேர்ந்துள்ளார்கள்.

அரசியல்வாதிகள் மட்டுமல்ல தொண்டர்கள் நிலையும் அவ்வாறானதே, தமிழ் நாட்டு அரவக் குறிச்சித் தொகுதியில் போட்டியிடும் அ.தி மு கவின் உத்தியோக பூர்வ வேட்பாளருக்கு எதிராக 159 அ தி. மு. கட்சியின் தொண்டர்கள் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர். இது தமது கட்சிக்காரரைத் தாமே தோற்கடிப்பதற்கான தீவிரமான நடவடிக்கை ஆகும்.

இந்தியாவில் உள்ள பாராளுமன்ற, சட்டசபை உறுப்பினர்கள் கட்சி மாறல் தடைச்சட்டங்கள் ஓரளவு கட்சித் தாவல்களைத் தடை செய்கின்றன. ஆனால் தேர்தல் களத்தில் இச்சட்டங்களினால் எதுவித இலாபமும் இல்லை.

இந்தியாவைப் பொறுத்து மக்கள் கொள்கைக்காகவும், செயற்பாட்டிற்காகவும் வாக்களிக்காமல் சாதிக்காகவும், சமயத்திற்காகவும், தனிப்பட்ட நபருக்காகவும், வாக்களிக்கும் வரை இது போன்ற விநோதங்கள் தொடர்ச்சியாக நடைபெற்றே வரும். கொள்கை என்று வரும் போதுதான் தனிநபர்களின் செல்வாக்கு அற்றவர்களாக மாறுவார்கள். அதுவரை ஜனநாயக உரிமை என்ற போர்வையில் நடைபெறும் கேலிக் கூத்துக்கள் தவிர்க்க முடியாதவை. அதேவேளை இந்தியாவின் அபிவிருத்தியும், நிலையான ஆட்சியும் ஏறபட முடியாதவை.

# பீகாரில் தேர்தல்கள் திட்டமிட்டபடி நடைபெறும்

### - ரி. என் சேஷன்

(டில்லி)

பீகாரில் தேர்தலை ஒத்திப் போடுவதற்கான முயற்சிகள் எதுவும் நடைபெறமாட்டாது எனவும், திட்டமிட்டபடி அங்கு தேர்தல்கள் நடைபெறும் என்றும் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ரி. என். சேஷன் தெரிவித்துள்ளார்.

முன்னதாக சம்பந்தப்பட்ட எல்லாத் தகவல்களையும் சீர் பார்த்த பின்னரே தேர்தல் பற்றி முடிவு எடுக்கப்படும் என்று ரி. என். சேஷன் தெரிவித்திருந்தார்.

இதன் பின்னர் நேற்று முன் தினம் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர் பீகரில் தேர்தல்கள் திட்டமிட்டபடி நடைபெறும் என்றும், தேர்தல் நடத்தப்பட முடியாத நிலை அங்கு தோற்றுவிக்கப் படலாம் என்ற கதைக்கே இடமில்லை என்றும் அவர் தெரிவித்தார்,

இதனிடையே தேர்தல் நிலைமை குறித்து ஆராய தென் மாநிலங்களுக்கு சேஷன் சென்றுள்ளார்.

## பொருளாதாரத் தடை நீக்க கோரிக்கை

(பாக்தாத்)

பாக்தாத்தில் குர்திஷ் இனப் போராளிகளின் தலைவர்களோடு ஈராக் அதிபர் சதாம் ஹுசைன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். குர்திஷ் இன மக்களுக்குசுயாட்சி, போராளிகளுக்கு பொது மன்னிப்பு உட்பட பல விடயங்கள் இச் சந்திப்பில் பேசப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை ஐ. நா. விதித்துள்ள பொருளாதாரத் தடையை விலக்கிக் கொள்ளுமாறு ஈராக் ஐ. நாவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

## தேர்தலைப் பிற்போட தீக்குளிக்க முயற்சி

தமிழகத்தில் காங்கேயம் வரகூர் சட்டப்பேரவைத் தொகுதிகளில் போட்டியிட மனுத்தாக்கல் செய்திருந்த சுயேச்சை வேட்பாளர் தீக்குளிக்கப் போவதாக அறிவித்ததைத் தொடர்ந்து பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

நேற்று முன் தினம் காங்கேயத்தில் கைது செய்யப் பட்ட இவர் இரண்டு தொகுதிகளிலும் தேர்தலை நிறுத்தி வைக்கும் வகையில் தீக்குளிக்கப் போவதாக அறிவித்திருந்தார்.

பின்னர் இவர்தேர்தல குற்ற முறை சட்டத்தின் கீழும், இந்திய நடைமுறைகளின் சட்டத்தின கீழும் பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

## தபால்களை சேர்ப்பிக்கவும்

எதிர்வரும் 15ஆம திகதி பருத்தித்துறையில் இருந்து குமண கப்பல் கொழும்பு நோக்கி புறப்பட இருப்பதால் பொதுமக்கள் தமது வெளியூர் தபால்களை 15ஆம் திகதிக்கு முன்னர் யாழ் தபாலகத்தில் ஒப்படைக்குமாறு யாழ் தபாலக வட்டாரம் தெரிவித்துள்ளது. (43)

## வெள்ளைமாளிகைக்கருகில் வீதிக் கலவரங்கள

(வாஷிங்டன்)

அமெரிக்காவில் ஜனாதிபதி செயலகமான வெள்ளை மாளிகையிலிருந்து ஒரு மைலுக்கும் குறைவான தூரத்தில வன்முறை மூண்டுள்ளது கடந்த இரண்டு நாட்களாகத் தொடரும் வீதிக்கலவரங்களை அடக்க வாஷிங்டன் நகர மேயர் நீண்டநேர ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

ஒழுக்கக்கேடான குற்றச் சாட்டில் ஒருவரைக் கைது செய்ய பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய நேரிட்டதைத் தொடர்ந்தேகலவரம் மூண்டதாக தெரிய வருகிறது. மேற்படி நபர் லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்தவர் என்பதால் லத்தீன் அமெரிக்காவிலிருந்து இடம் பெயர்ந்திருக்கும் சுமார் முந்நூறு பேர் ஆர்ப்பாட்டத்தில இறங்கியதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

1968இல் மார்ட்டின் லூதர் கிங் கொலை செய்யப்பட்டபோது இடம்பெற்ற கலவரத்தின் பின்னர் வாஷிங்டனில் இடம்பெறும் மிக மோசமான கலவரமாக இது கருதப்படுகின்றது.

## பறிமுதல்

பலத்த சிரமங்களின் மத்தியில் யாழ்ப்பாணத்தில் இருந்து விற்பனைக்காக அத்தியாவசிய உணவுப் பொருள்களை வாங்கிச் சென்ற நயினாதீவு வர்த்தகர்களிமிருந்து சிறிலங்கா கடற்படையினர் அனைத்துப் பொருள்களையும்பறிமுதல் செய்துள்ளனர்.

## அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவி

(கிளிநொச்சி)

கிளிநொச்சியிலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் பூநகரியில் உள்ள இடம் பெயர்ந்தவர்களுக்கு 50 மூடை அரிசியும், பால் மாவும் வழங்கியுள்ளது. (49)

## ஐயாயிரம் அமெரிக்க படை வளைகுடாவில் தரிக்கும்

(குவைத்)

ஐக்கிய அரபு எமிரேட்சுக்கு பாதுகாப்பு அளிப்பதற்காக ஐயாயிரம் அமெரிக்க தரைப் படை இராணுவத்தினர் இன்னும் சில மாதங்களுக்கு குவைத்திலேயே தொடர்ந்தும் தங்கியிருப்பார்கள் என்று அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் டிக்ஸ் ஜெனி தெரிவித்துள்ளார்.

கடந்தபுதன்கிழமை குவைத் பிரதமமந்திரி ரிஷேக்சதாதை சந்தித்ததன் பின்னர் பத்திரிகையாளர் மத்தியில் பேசும் போது இதனைத் தெரிவித்தார்.

வளை குடாப் பிராந்தியத்தின் பாதுகாப்பிற்கான திட்டமொன்றை அமெரிக்கா தயாரித்துள்ளது என்றும் இத் திட்டத்தின் படி வளைகுடா நாடுகளின் ஆயுதப் படைகளுடன் அது இராணுவப் பயிற்சி நடவடிக்கைகளை நடத்தி பயிற்சி வசதிகளுக்கு வகை செய்யும் என்றும டிக்ஸ் ஜெனி தெரிவித்தார்.

குவைத்திலுள்ள சில இராணுவ சாதனங்களை அமெரிக்கா நிறுத்தி வைக்கப் போவதாகவும அந்தப் பிராந்தியத்தில் தமது கடற்படையினரின் நடமாட்டத்தை அதிகரிக்கப் போவதாகவும் டிக்ஸ் ஜெனி குறிப்பிட்டார்.

## பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

கணபதி ஜோசப் தெய்வேந்திரன் (சரவணை), ஏகநாதன் விஜயானந்த (சங்கானை) ஆகியோரின் அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். (21)

## புத்தகக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

மகரிஷி சுத்தானந்த பாரதியார் தினத்தையொட்டி இன்று சனிக்கிழமை (11.05 91) நல்லை ஆதீனத்தில் காலை புத்தகக கண்காட்சியும் மாலை மூன்று மணியளவில் சொற்பெருக்கும் இடம்பெற உள்ளன.

## கொழும்பு விடுதிகளில் தமிழ் இளைஞர் கைது

(ஈச்சமோட்டை)

கொழும்பில் உள்ள ஐலண்ட் சரஸ்வதி விடுதிகளை பொலிசார் சென்ற கிழமை திடீர் முற்றுகை செய்து பல தமிழ் இளைஞர்களை கைது செய்துள்ளனர். சில இளைஞர்களை விசாரணையின் பின்னர் விடுதலை செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இன்று நடைபெறவிருக்கும் உள்ளூராட்சிசபை தேர்தலுக்கு முன் எச்சரிக்கை நடவடிக்கையாகவே இந்த சம்பவம் நடைபெற்றதாக கூறப்பட்டது. (43)

## சீனிவாசன் விலகினார்

(சென்னை)

தமிழ்நாடு கலைக்கப்பட்ட சட்ட சபையின் துணை சபாநாயகரான திரு. பி. சீனிவாசன் தி. மு. கவிலிருந்து விலகியுள்ளார் கட்சியின்தலைமை செயற்படும் விதம் குறித்து குற்றம் சாட்டிய இவர் முன்பு சிவகாசி சட்ட மன்றத் தொகுதியிலிருந்து தேர்நதெடுக்கப் பட்டவராவார்.

## வேலணை சங்க கிளைகளில் $2\frac{1}{2}$ லட்சம் ரூபா கொள்ளை

(வேலணை)

வேலணையில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்துள்ள இவ் வேளையில் வேலணை பல நோக்கு கூட்டுறவுச் சங்க கிளைகளான இல. 14, 17, 9 ஆகியவற்றில் கொள்ளையிடப்பட்டுள்ளன. இக்கிளைகளில் இரண்டரை இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் இருந்ததாகவும் அவையே கொள்ளையடிக்கப் பட்டுள்ளதாக சங்க பொது முகாமையாளர் வே செல்லத்துரை தெரிவித்துள்ளார்.

# அமெரிக்க இராணுவ விஸ்தரிப்பிற்கு வளைகுடா நாடுகள் இணக்கம்

(றியாட்)

வளைகுடாவில் அமெரிக்க இராணுவத்தை விஸ்தரிப்பது மற்றும் பிராந்தியப் பாதுகாப்பை வலுப்படுத்த நடவடிக்கைகள் எடுப்பது குறித்து வளைகுடா நாடுகளின் அரசுகளும், தமது நாடும் ஒப்புக் கொண்டுள்ளன என்று அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் டிக்ஸ் ஜெனி கூறியுள்ளார்.

சவூதி அரேபியாவில் இருந்து அமெரிக்காவிற்கு செல்லும் வழியில் றியாட் விமான நிலையத்தில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய டிக்ஸ் ஜெனி ரகசியமான சில நடவடிக்கைகளும் அடங்கிய இந்த உடன்பாட்டில் வளைகுடா நாடுகள் எளிதில் வெளிராணுவத் தாக்குதல்களுக்கு உள்ளாகாமல் பார்த்துக் கொள்ளுதலும் அப்படி ஏதாவது நடந்தால் அவர்களுக்கு அமெரிக்கப் படையினர் உதவிக்கு வருவதும் என்ற நிபந்தனைகள் அடங்குகின்றன எனத் தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் ஆலோசனையை ஆறு வளைகுடா நாடுகளும் ஏற்றுக் கொண்டுள்ளன என்றும் டிக்ஸ் ஜெனி தெரிவித்தார்.

## நேற்று வீசிய புயலால் பங்களாதேஷில் 80பேர் பலி

(டாக்கா)

பங்களாதேஷில் மீண்டும் புயல் வீசத் தொடங்கியது. நேற்று வீசிய காற்றினால் எண்பதுக்கும் அதிகமானோர் இறந்துள்ளார்கள். பங்களாதேஷின் வடக்கிலும், கிழக்குப் பகுதியிலும் நூறு மைல் வேகத்தில் வீசிய புயற்காற்றினால் நூற்றுக்கும் அதிகமான மண்குடிசைகள் இடிந்து வீழ்ந்தன.

ஜப்ரா நதியில் சென்று கொண்டிருந்த வள்ளமொன்று கவிழ்ந்து அதில் பயணம் செய்த பதினைந்து பேர் நீரில் மூழ்கி இறந்தனர். புயற்காற்றில் சிக்குண்டு இருநூறு பேர் காயமடைந்துள்ளார்கள்.

கடந்த வாரம் வீசிய சூறாவளியைத் தொடர்ந்து இருபத்து மூன்று மாவட்டங்களில் 951 பேர் வயிற்றோட்ட நோயினால் இறந்துள்ளார்கள் என பங்களாதேஷ் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

## சோவியத் அமைச்சர் இஸ்ரேல் விஜயம்

(டெல் அவிவ்)

மத்திய கிழக்கு சமாதான முயற்சிகளில் பங்கேற்கும் முகமாக மத்திய கிழக்கிற்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டிருக்கும் சோவியத் வெளியுறவு அமைச்சர் அலெக்சான்டர் பெஸ்மட்னிக் நேற்று இஸ்ரேல் போய்ச் சேர்ந்தார். இஸ்ரேலியப் பிரதமர் யிட்சாக் ஷமிர், வெளியுறவு அமைச்சர் லெவி ஆகியோருடன் பெஸ்மட்னிக் பேச்சு நடத்தவுள்ளார்.

சோவியத் நாட்டு அமைச்சர் ஒருவர் இஸ்ரேலுக்கு சென்று பேச்சு நடத்துவது இதுவே முதல் தடவையாகும். 1967ன் பின்பு சீர்குலைந்த சோவியத் இஸ்ரேல் உறவுகளில் முன்னேற்றம் ஏற்படுமென நம்பப்படுகிறது.

## தளங்களை வாபஸ் பெற பிலிப்பைன்ஸ் கோரிக்கை

(மணிலா)

தமது நாட்டிலுள்ள அமெரிக்க இராணுவ தளங்களை வாபஸ் பெற்றுக்கொள்ளும்படி பிலிப்பைன்ஸ் அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

சகல அமெரிக்க வீரர்களும் 1998 ஆம் ஆண்டுக்குள் வாபஸ் பெறப்பட வேண்டுமென பிலிப்பைன்ஸ் கோரியுள்ளது. படிப்படியாக சகல அமெரிக்க வீரர்களும் வாபஸ் பெறப்படும் வரை இராணுவத்தளங்கள் அமெரிக்கா வசம் இருக்க அமெரிக்கா விடுத்த வேண்டுகோளையும் பிலிப்பைன்ஸ் அரசாங்கம் நிராகரித்து விட்டது. ஏழு வருடங்களின் பின்னர் இத்தளங்களை அமெரிக்கா வைத்திருக்க விரும்பினால் புதிய பேச்சுவார்த்தைகள் நடத்தப்படவேண்டும் என்று அமெரிக்க தரப்பு உத்தியோக பூர்வ பேச்சாளர் குறிப்பிட்டார்.

## பஞ்சாப்பில் வேட்பாளர் சுட்டுக்கொலை

(டில்லி)

பஞ்சாப்பில் தேர்தலில் போட்டியிடும் இன்னொரு வேட்பாளர் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

லுதியானாத் தொகுதியிலிருந்து லோக்சபைக்குப் போட்டியிடும் சட்தார் சிங் என்பவர் நேற்றுப் பிற்பகல் அடையாளம் காணப்படாத சிலரால் சுட்டுக் கொலையப்பட்டார்.

ஏற்கனவே பஞ்சாப் மாநிலத்தில் சட்டசபைத் தேர்தலுக்கு நின்ற ஐந்து வேட்பாளர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

## குவைத்திய கரன்சிகள் சட்டப்படி செல்லுபடியாகும்

(குவைத்)

குவைத்தில், ஈராக்கின் ஆக்கிரமிப்பிற்கு முன்னர் புழக்கத்தில் இருந்த கரன்சி நோட்டுக்கள் சட்டப்படி செல்லுபடியாகும் என குவைத்திய மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

வங்கிகளில் பழைய கரன்சி நோட்டுக்களை செப்டம்பர் மாதம் 10ஆம் திகதி வரை தங்கள் வங்கிக் கிளைகளில் மாற்றிக் கொள்ளலாம் என்று மத்திய வங்கி தெரிவித்தது. அத்துடன் குவைத்துக்கு வெளியேயும் இந்த கரன்சி நோட்டுக்கள் செல்லுபடியாகும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## கூட்டமைப்பாக ஐரோப்பா உருவாகும் சாத்தியம்

(லண்டன்)

ஐரோப்பிய சமூகத்தை மையமாகக் கொண்டு பன்னிரண்டு அங்கத்துவ நாடுகளைக் கொண்ட கூட்டு அமைப்பாக ஐரோப்பா உருவாகக் கூடிய சாத்தியம் இருக்கின்றது என்று மீளமைப்பு அபிவிருத்திக்கான ஐரோப்பிய வங்கித் தலைவர் ரெசுக் அற்றலி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் லண்டனில் நடைபெற்ற 21 ஆம் நூற்றாண்டில் எழக்கூடிய சவால்கள் என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் பேசிய அற்றலி சோவியத்யூனியன் உட்பட ஐரோப்பாவில் உள்ள சகலநாடுகளும் இந்தக் கூட்டமைப்பில் சேர்ந்து கொள்ளக் கூடும் எனத் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தைகள் மூலம் இந்தப் பன்னிரண்டுநாடுகளும் தனியொரு நாணயத்தைப் புழக்கத்தில் இருக்கச் செய்வதற்கும் மத்திய வங்கி ஒன்றை அமைத்துக் கொள்வதற்கும் ஐக்கிய அரசியல் நிறுவனங்களை உருவாக்கிக்கொள்வதற்கும் இணக்கம் தெரிவிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## சந்திரசேகர் பங்களாதேஷ் விஜயம்

(டில்லி)

இந்தியப் பிரதமர் சந்திரசேகர் ஞாயிறன்று பங்களாதேஷ் செல்கிறார். புயலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்குவதுபற்றி ஆராயவே பிரதமர் டாக்கா செல்கிறார்.

## விளையாட்டு வீரர்கள் சந்திக்கவு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சமூகங்களையும் விளையாட்டுக் கழக ஆர்வமுள்ள இளைஞர்களையும், விருங்கனைகளையும் எதிர்வரும் 15 ஆம் திகதி மலாகத்திலுள்ள டணியையில் சந்திக்கும்படி வலிகாமம் வடக்கு உதவி அரசாங்க அதிபர் க. நடராஜா கேட்டுக் கொள்கிறார்.

## அரிசி அன்பளிப்பு

(பருத்தித்துறை)

சிறிலங்கா படையினரால் தீவுப்பகுதியில் கட்டவிழ்த்து விடப்பட்ட கொடூரங்களுக்கு அஞ்சி இடம்பெயர்ந்துள்ள தீவுப்பகுதி மக்களுக்கு உணவுப் பொருள்களை விநியோகிக்க வியாபாரிமூலை விநாயகர் தருமநிதியம் 1 00 000 ரூபா பெறுமதியான அரிசியை தமிழர் புனர்வாழ்வுக்கழகத்திடம் கையளித்துள்ளது.

(25)

### உறுப்புரிமை

இவ்வாறு ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கச் செயலர் சிவஞான சிறிகணேசன் யாழ் வர்த்தகர் சங்கத்துக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

### சிறிலங்காவில்

றவுள்ளது. இத் தேர்தலின் முடிவுகள் 24 மணி நேரத்தில் வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தேர்தல் நேர பாதுகாப்புப் பணிக்கு 50, 000 பொலிசார் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

நடு நிலை தவறியதாக

## பத்திரிகைகள் மீது கருணாநிதி குற்றச்சாட்டு

(சென்னை

சில நாளிதழ்கள் தமது கட்சியைப் பற்றி உண்மை நிலையை எடுத்துக் காட்டவில்லை. தவறான செய்திகளைப் பிரசுரிக்கின்றன என்று தி. மு. தலைவர் மு. கருணாநிதி குறை கூறியுள்ளார்.

திருச்சிராப்பள்ளிக்கு அருகே பொதுக்கூட்டமொன்றில் நேற்றுப் பேசிய கருணாநிதி, நடுநிலையாகச் செய்திகளை வெளியிடுமாறு நாளிதழ்களை கேட்டுக்கொண்டார். தி. மு. க அரசை நீக்கியதன்மூலம் மத்திய அரசு தவறு செய்துவிட்டது என்று கூறிய கருணாநிதி தமது கட்சிக்கு நீதி கிடைக்கச்செய்யுமாறு மக்களைக் கேட்டுக் கொண்டார்.

### மாதர் பணிக்கர்

இராணுவத்தினர் பலத்த இழப்புகளுடன் பூவரசங்குளத்தை வந்தடைந்தனர்.

பின்னர் பிற்பகல் 2.45 மணியளவில் பூவரசங்குளத்தில் இருந்து பாலமோட்டையை நோக்கி முன்னேறிவந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மாதர் பணிக்கர் மகிழங்குளப் பாடசாலைக்கருகே வைத்து தாக்குதலை மேற்கொண்டனர். இதைத் தொடர்ந்து இராணுவத்தினரின் முன்னேற்றம் தடைப்பட்டது.

இச் சண்டை பிற்பகல் 2 45 மணியில் இருந்து மாலை 5 30 மணி வரை நீடித்தது இதில் விடுதலைப் புலிகளின் ஆர்.பி. ஜி. தாக்குதலால் இராணுவத்தினரின் பவல் கவச வாகனம் பலத்த சேதமடைந்தது.

சேதமடைந்த இக் கவசவாகனத்தை இராணுவத்தினர் புல்டோசருடன் சேர்த்துக் கட்டி இழுத்துக் கொண்டு கோமரசங்குளத்துக்குக் கொண்டு சென்றனர்.

சிறிலங்கா இராணுவத்தினர் தற்போது மாதர் பணிக்கர் மகிழங்குள கூட்டுறவுக் கட்டடத்தில் நிலை கொண்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதே வேளை இம் மோதல் சம்பவத்தில் மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

## "உள்ளூர் தாளில் "கல்விக் கதிர்"

(யாழ்ப்பணம்)

முறைசாராக் கல்விப் பிரிவினரால் "கல்விக்கதிர்" என்னும் வாராந்தப் பத்திரிகை ஒன்று வெளியிடப்படவுள்ளது.

கல்வி, பொருளாதாரசமூக மேம்பாடுகளை விளக்கி உள்ளூர் தாளில் முறைசாராப்பிரிவினரால் எதிர்வரும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் இப்பத்திரிகை வெளியிடப்படவுள்ளது.

இப் பத்திரிகை வெளியீட்டு விழா அன்றைய தினம் காலை 11 மணிக்கு நல்லூர் சாதனா பாடசாலை கட்டடத்தில் யாழ் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும்.

### மிதிவெடியில்

சிக்கி பலத்த காயங்களுடன் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

நேற்றுக்காலை 9மணியளவில் ஆனைக்கோட்டை மூன்றாம் கட்டைப்பகுதியில் இச் சம்பவம் நடந்தது.

மேற்படி சம்பவத்தில் படுகாயமடைந்தவர் அதே இடத்தைச் சேர்ந்த புவனேந்திரன் சுஜேந்திரன் (வயது10) ஆவார். இவரது கால்கள், கைகள், முகம் முழுவதும் பலத்த காயமேற்பட்டது. (ச)

## வேம்படி மகளிர் கல்லூரி புனருத்தாரண நிதி

(யாழ்ப்பாணம்)

யாழ் வேம்படிமகளிர் உயர்தர கல்லூரியின் எழுது வீதமான கட்டடங்கள் அண்மைக்காலப் போர் நடவடிக்கையினால் சேதமடைந்துவிட்டன. இதனால் யாழ். வேம்படி பழைய மாணவர் சங்கம் பாடசாலைப் புனருத்தாரண நிதியை ஆரம்பித்துள்ளது. பழைய மாணவர்களும், நலன் விரும்பிகளும நிதியை வழங்கி உதவுமாறு கேட்டுள்ளதோடு. இந்நிதியை இலங்கை வங்கி யாழ்ப்பாணம் மேற்றரக்கிளையிலுள்ள வேம்படி பழைய மாணவர் சங்கக் கணக்கு இலக்கம் 23320 க்குச் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## கைச் சங்கிலி கண்டெடுப்பு

(யாழ்ப்பணம்)

தங்கக் கைச்சங்கிலியொன்று பருத்தித்துறைப் பகுதியில் கண்டெடுக்கப்பட்டு வடமராட்சி விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணிக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரங்காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

### ஓய்வூதிய

விட்டதாகக் கூறியதுடன், அடுத்து வடபகுதிக்கு உணவுப் பொருள்கள் கொண்டுவரும் கப்பலில் எடுத்து வரப்படும் மே மாத வவுச்சர்கள் உடனடியாக ஓய்வூதியருக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் கூறினார்

அடுத்ததாக 'லிலனி வில்லி' என்னும் கப்பல் வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## பெண் காயம்

(யாழ்ப்பாணம்)

கட்டுவனில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் குடபிளான், ஏழாலைப் பகுதிகளை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

நேற்றுமாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் காசிப்பிள்ளை பார்வதி (வயது 49) என்ற பெண் படுகாயமடைந்துயாழ் போதனா மருத்துவ மனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (க)

## மேலதிக அலவன்ஸ்

(கொழும்பு)

கஷ்டப் பிரதேசங்களில், பிரதேச செயலாளர் அலுவலகங்களில் கடமை புரியும் பிரதேச செயலாளரது மேலதிக அரசாங்க அதிபர்களுக்கு செலுத்தப்படும் கொடுப்பனவுகளுக்கும் மேலாக மாதாந்தம் ஆயிரம் ரூபாவினை வழங்க தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஜனவரி முதல் அமுலாகும் வண்ணம் இந்தக் கொடுப்பனவு செலுத்தப்படுவதாக பொது நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்தில் உள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மே மாதம் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.